# மூன்றாண்டு நிலைமை அறிக்கை

## 2021-2023

**சுயாதீன ஆணைக்குழுக்கள்**

## உள்ளடக்கம்


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்று பொழிப்புரை | | 2 |
| **2.** | நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் | | 3 |
| **3.** | சுயாதீன ஆணைக்குழுக்களின் அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | தேர்தல்கள் ஆணைக்குழு | 5 |
| | 3.2 | எல்லை நிர்ணய ஆணைக்குழு | 8 |
| | 3.3 | அரசாங்க சேவை ஆணைக்குழு | 10 |
| | 3.4 | நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை | 14 |
| | 3.5 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 17 |
| | 3.6 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு | 26 |
| | 3.7 | தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு | 32 |
| | 3.8 | நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம் | 35 |
| | 3.9 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 46 |

## 1. நிறைவேற்று பொழிப்புரை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பின்வரும் 09 சுயாதீன ஆணைக்குழுக்களுக்காக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த அறிக்கை மூலம் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதாக வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தீர்கக்கப்படாத முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணைக்குழுக்களுக்கும் உரிய 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஆணைக்குழுக்களில் காணப்பட்ட மொத்த சொத்துக்கள், மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனமும், அவ்வாறே ஒவ்வொரு ஆணைக்குழுக்கள் தொடர்பாகவும் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயமும் இந்த அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

சுயாதீன ஆணைக்குழுக்களால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்டபில் சுயாதீனமான சான்றுபடுத்தலொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும். நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை வழங்குவதன் மூலம் இந்த சான்றிதழ் வழங்கப்படுகின்றது. சுயாதீன ஆணைக்குழுக்களின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களின் நியாயமான நிலைமைகள் வெளிப்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பது மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அல்லது தற்போது சர்வதேச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றதா இல்லையா என்பது தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கணக்காய்வு அபிப்பிராயத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இணக்கமின்மைகள் மற்றும் விடயப்பரப்பிலான மட்டுப்படுத்தல்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் இணக்கமின்மைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டதன் பின்னர் நான்கு முறைகளில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவை பின்வருமாறு.

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்படாத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் அவை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வியாபித்திருக்காத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள பொருண்மையான / பிறழ் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களில் வியாபித்துள்ள போது பாதகமான கணக்காய்வு அபிபிராயம் வழங்கப்படும்.

**மறுப்பு அபிப்பிராயம்**

விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் கணக்காய்வுக்கு கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் கணக்காய்வினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாத பிறழ் கூற்றுகள் காணப்படும் என தீர்மானிக்கின்ற போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**சுயாதீன ஆணைக்குழுக்களின் அபிப்பிராயம் தொடர்பான தகவல**

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 09 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற | 04 | 04 | 04 |
| முனைப்பழியுள்ள | 05 | 05 | 05 |
| மறுப்பு | - | - | - |
| பாதகமான | - | - | - |
| அபிப்பிராயம் இதுவரை தீர்மானிக்கப்படாத எண்ணிக்கை | - | - | - |
| நிதிக்கூற்றுக்கள் கிடைக்காத எண்ணிக்கை | - | - | - |

| | பெயர் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| 1. | தேர்தல்கள் ஆணைக்குழு | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 2. | எல்லை நிர்ணய ஆணைக்குழு | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 3. | அரசாங்க சேவை ஆணைக்குழு | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற |
| 4. | நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 5. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| 6. | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 7. | தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 8. | நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 9. | தேசியபொலிஸ் ஆணைக்குழு | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |

## 3. சுயாதீன ஆணைக்குழுக்களின் அவதானிப்புக்கள்

### 3.1 தேர்தல்கள் ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,166,890,635 | 2,764,523 | 2,164,126,112 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,302,705,969 | 1,192,646 | 2,301,513,323 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,511,626,983 | 164,069,433 | 2,347,557,550 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | கடந்த சில தேர்தல்களுக்காக சரியான திட்டமிடல் இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,848,164 பெறுமதியான அச்சிடல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 04 பொருள் விடயங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | 2022 | நிதிப் பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்தவரை தீர்மாணித்தலை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பொறுப்புவாய்ந்த வரை தீர்மானித்துக் கொள்வதற்காக குழு ஒன்றை நியமித்தல். | குழு அறிக்கை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பரிந்துரை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2 | 2020 வருடம் கெப் வாகனமொன்றிற்கு ஏற்பட்ட ரூபா 2,075,845 ஆன நட்டம் தொடர்பாக 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டியமை. | நட்டம் மற்றும் இழப்புத் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை பூர்த்தி செய்து ஒழுக்காற்றுக் கட்டளையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே கிரயம் ரூபா 6,717,017 மற்றும் ரூபா 1,380,261 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்றுத் தீக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை இனங்கண்டு உரிய நிதியல்லா சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றியிருக்காமை யால் அந்த பெறுமதியினால் நிதி அல்லாத சொத்துக்களின் மீதி மிகையாக காட்டப்பட்டிருந்தது. அதேபோல், முன்னைய ஆண்டிற்கு முன்னரும் இவ்வாறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்றுத் தீக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுமதிகளும் நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்க வில்லை. | 2021<br>2022<br>2023 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்க ளின் விற்றுத் தீக்கப்பட்டிருந் த சொத்துக்கை ள இனங்கண்டு உரிய பெறுமதியினை ன நிதி அல்லாத சொத்துக்களி ன் மீதியில் இருந்து அகற்றப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்களின் குறியீடுகள் மற்றும் பெறுமதிகள் ஊஜபுயுளு தரவு முறைமையில் குறியீடு மற்றும் பெறுமதிகளுடன் இணங்காமையால் அதனை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சீராக்கங்களை பூர்த்தி செய்தவுடன் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள து. |
| 4 | சுற்றறிக்கைக்கு இணங்க ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு உரித்தான எரிபொருள் வரையறையை | 2023 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கு இணங்க செயற்பட வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

மிகைத்து 2023
ஆண்டு ஒதுக்கப்பட்ட
03
வாகனங்களுக்காக
எரிபொருள் 1238.5
லீற்றர்
வழங்கப்பட்டிருந்தது.

## 3.2 எல்லை நிர்ணய ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,434,683 | 3,434,683 | 3,434,683 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,483,515 | 3,483,515 | 3,483,515 | முனைப்பழியற்ற |
| **2023** | 3,673,026 | 3,673,026 | 3,673,026 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனம் பற்றி பொது மக்களின் தேவைகள், குற்றங்கள் அல்லது தவறுகள் பற்றி பதிவிடுவதற்கு உத்தியோகபூர்வ இணையதளம் வசதியளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. | 2023 | உத்தியோகபூர்வ இணையதளம் பேணப்பட வேண்டும். | இணைய தளத்தில் பிரசுரிப்பதற்குள்ள அளவில் உள்ளடக்கங்கள் அல்லது குறித்துரைத்த பணிப் பொறுப்புக்கள் காணப்படாது இருந்தமையால் உத்தியோக பூர்வ இணையதளம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. | உத்தியோகபூர்வ இணைய தளம் ஒன்றை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| 2 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 15 ஆக இருந்த போதும் உள்ளபடியான பதவியணி 08 ஆக இருந்தமையால் 07 வெற்றிடங்கள் இருந்தன. சிரேஸ்ட நிலையில் | 2021<br>2022<br>2023 | அத்தியாவசிய பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | இதுவரையில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. |

செயலாளர் பதவி மற்றும் கணக்காளர் பதவிக்காக 2016 ஆம் ஆண்டு முதல் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 3.3 அரசாங்க சேவை ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 856 880 407 | 856 880 407 | 856 825 716 | முனைப்பழியுள்ள |
| **2022** | 843 474 981 | 843 474 981 | 843 373 000 | முனைப்பழியுள்ள |
| **2023** | 904 240 563 | 904 240 563 | 904 184 961 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணைக்குழுவின் ஒழுக்காற்று காட்டுப்பாட்டின் கீழ் உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் ஆணைக்குழுவின் பிரதான கருமம் ஒன்றாக காணப்படுவதுடன், இலங்கை சனநாயக சோசலிச குடியரிசின் தாபனக் கோவையின் தொகுதி ஐஐ அத்தியாயம் ஓடுஓஐஐஐ தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 30.˙.2019 கொண்ட மற்றும் 2019 செப்தம்பர் 30 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் | 2023 | 30.˙.2019 இலக்கம் கொண்ட மற்றும் 2019 செப்தம்பர் 30 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்தது. | - | தற்போது அதில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் நான்கிற்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதுடன் ˚ளுஊ.˙.னுஐளு.˙.059 .˙.2019 தவணைகள் நான்கு ˚ளுஊ.˙.னுஐளு.˙.060 .˙.2019 தவணைகள் இருபத்து மூன்று ˚ளுஊ.˙.னுஐளு.˙.043 .˙.2021 மற்றும் ˚ளுஊ.˙.னுஐளு.˙.056 .˙.2021 தவணைகள் நான்கு வீதம் நடாத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அது பூர்த்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு ஆளாக்கிய 08 ஒழுக்காற்று அலுவல்கள் அந்த கோரிக்கைகள் கிடைத்து 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் 2024 பெப்ரவரி 24 திகதி அளவிலும் அந்த ஒழுக்காற்று அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | | | | |
| 2 | ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழு, தாபனப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு, நியமனப் பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவுகளால் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிரு ந்த கருமங்களின் எண்ணிக்கை மாத்திரம் செயலாற்றுகை அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த துடன், மீளாய்வாண்டின் போது பிரிவுக்கு கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை, அந்த முறைப்பாடுகளில் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொடர்ந்து மீதியாக காணப்படும் எண்ணிக்கை ஆகிய | 2023 | செயலாற்றல் அறிக்கையில் ஆண்டிற்கான செயலாற்றல் மட்டத்தை கணிப்பதற்கு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்ப ட வேண்டியிருந் தது. | - | 2024 ஆம் ஆண்டின் போது செயலாற்றல் அறிக்கைக்காக உரிய பிரிவிற்கு பொது படிவத்தின் மூலம் உங்களால் கோரப்பட்டுள்ள பிரகாரம் உரிய தரவுகளை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி, 2023 செயலாற்றல் அறிக்கையில் 2023 ஆண்டில் செயலாற்றல் மட்டத்தை கவனத்தில் எடுக்கக்கூடிய அளவு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 3 | 2023 ஆண்டில் மேன்முறையீட்டுப் பிரிவிற்கு கிடைத்திருந்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை பொருண்மையானவை என காட்டப்பட்டிருந்த போதிலும், அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் அறிக்கைகள் கோரப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கும் போது அவை மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகளின் மேன்முறையீட்டு எண்ணிக்கையையும் உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்தப் பிரிவின் மீளாய்வாண்டின் செயலாற்றல் மட்டத்தை | 2023 | செயலாற்றல் அறிக்கையில் ஆண்டிற்கான செயலாற்றல் மட்டத்தை கவனத்தில் எடுப்பதற்கு போதியளவு விடயங்கள் உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. | மேன்முறையீட்டுப் பிரிவிற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக உரிய அமைச்சில் இருந்து அவதானிப்புக்கள், பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கை மற்றும் கோவைகளை பெற்றுக் கொள்வதற்காக முறைப்பாட்டுப் பிரிவின் மூலம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய அமைச்சு மற்றும் திணைக்களத்தில் இருந்து அறிக்கை கோரப்பட்ட போதும் அந்த ஆண்டின் போது அந்த அறிக்கை கிடைக்காது இருந்ததுடன் அதன் காரணமாக முறைப்பாடு கிடைத்த ஆண்டின் போதே ஆணைக்குழு தீர்மானம் | அமைச்சு மற்றும் திணைக்களங்களில் இருந்து உரிய அறிக்கை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள உள்ளக நிலையியல் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| தீர்மானிப்பதற்கு போதியளவு தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எடுப்பதற்கு முடியாதிருந்தது. |

## 3. 4 நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 22,144,990 | - | 22,144,990 | முனைப்பழியற்ற |
| **2022** | 22,266,140 | - | 22,266,140 | முனைப்பழியற்ற |
| **2023** | 22,395,390 | - | 22,395,390 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 2002 இன் 04 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நியாயசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைபாடுகள் அந்த முறைப்பாடுகள் கிடைத்து 02 மாதத்திற்குள் விசாரணை செய்து இறுதியாக பொருத்தமானதை செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் நியாயசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கு குறைந்த தீர்த்து வைப்பதற்கு காணப்பட்ட 412 முறைப்பாடுகளும், 03 வருடங்களுக்கு | 2022 | சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் நியாயசபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதாவது முறைப்பாடுகள் கிடைத்த திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் விசாரணை செய்து ஏதாவது பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இலலையாயின் சட்டத்தின் அந்த பிரிவுகளை திருத்துவதற்காக | சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது பொருத்தமற்றதாக இருந்ததாகவும் ஆலோசனையின் அடிப்படையில் சட்டமா அதிபர் கருத்தாக இருந்தது. சட்டத்தை திருத்துதவற்காக சனாதிபதி செயலாளருக்கு அனுப்பப்பட்ட போதும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | புதிய தலைவர் ஒருவர் 2024.09.18 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்ட பின்னர் விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடாத்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு இற்கு அறிவித்து விரைவாக நடவடிக்கைகள் ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த தீர்த்து வைப்பதற்கு காணப்படுகின்ற 354 முறைப்பாடுகளும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்த்து வைப்பதற்கு காணப்படுகின்ற 47 முறைப்பாடுகளும் காணப்பட்டன. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| 2. | 2022 ஆம் ஆண்டில் நியாயசபைக்கு கிடைத்த 252 முறைப்பாடுகளில் 06 முறைபாடுகள் மாத்திரமே தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. அது கிடைத்த முறைப்பாடுகளில் 2.38 சதவீதம் ஆகும். | 2022 | முறைப்பாடுகளை தீர்ப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணங்களை இனங்கண்டு அதற்கு தீர்வினை தயாரித்து தாமதத்தினை குறைத்தல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட ஒட்டு மொத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 208 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது கிடைத்த முறைப்பாடுகளை தீர்ப்பது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மேன்முறையீட்டு நியாய சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை ஆவணங்கள் போன்றவை உரிய கால எல்லையில் சமர்ப்பிக்காமை மற்றும் விசாரணை செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த தினங்களில் இருதரப்பினர் தனிப்பட்ட அல்லது கடமை காரணமாக வேறொரு தினத்திற்கு மாற்றுதல் என்பவற்றின் காரணமாக தாமதமடைந்தமைக் | முறைப்பாட்டாளரின் கோரிக்கையின் அடிப்படையில் காலம் கோருதல், அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு அவதானிப்புக்கள் சமர்ப்பித்தலில் தாமதம் ஏற்பட்டமையால் தீர்வினை வழங்குவதற்கு தாமதமடைந்திருந்ததுடன் அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த ஆணைக்குழுக்கள் மற்றும் மேன்முறையீட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அதே போக்கில் காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காக தாக்கமளித்திருந்தது. | |
| 3. | நியாய சபை நிறுவப்பட்டு 21 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் ஒவ்வொரு பதவிக்காகவும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்திருக்கவில்லை. | 2023 | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்து தேவையான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 109,609,946 | 109,609,946 | 109,506,387 | முனைப்பழியற்ற |
| **2022** | 110,674,395 | 110,674,395 | 109,094,275 | முனைப்பழியற்ற |
| **2023** | 110,792,177 | 110,792,177 | 110,726,588 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணைக்குழுவினால் 2016 வருடம் முதல் 2018 வருடம் வரையிலான கால எல்லையினுள் கல்வி அமைச்சுக்கு, ஓய்வூதிய திணைக்களத்திற்கு மற்றும் இலங்கை பொலிசுக்கு அவை தொடர்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 147 பரிந்துரைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட திகதியான 2022 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளில் நூற்றுக்கு 44, அதாவது 64 பரிந்துரைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. | 2021 | பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்துவது தொடர்பாக பின் விசாரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆணைக்குழுவின் பரிந்துரை அமுல்படுத்தாமை தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்கான பரிசோதனைகள் மற்றும் விசாரணை பிரிவினால் தனியான அலகு ஒன்று ஸ்தாபித்து பரிந்துரைகளை அமுல்படுத்தாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அமுல்படுத்தப்படாத பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக உரிய ஆண்டில் 2024.10.11 இல் உள்ளவாறு 49 பரிந்துரைகளின் பின்னர் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உரிய பிரதிவாதிகளை வரவழைத்து மிகுதிப் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மாத்தறை பிரதேச அலுவலகம் மூலமாக 2020 மற்றும் 2021 வருடங்களின் போது பொலிஸ் நிலையங்கள், தடுத்து வைப்பு மத்திய நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் அவதானிக்கப்பட்டு விசாரணை அதிகாரியினால் அது தொடர்பாக தயாரிக்கப்படும் அறிக்கைகளில் பதியப்பட வேண்டிய மிக முக்கிய விடயங்களாக காட்டப்பட்டுள்ள தள அவதானிப்பின் போது கண்டு கொள்ளப்பட்ட விடயங்கள் அது தொடர்பாக தமது முடிவுகள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கையினை யாவை என்பன உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வறிக்கையினை யார் கவனத்திற்கு கொண்டு செல்வது என்பதனை குறிக்கப்பட்டில்லாது இருந்ததுடன் அவ்வறிக்கையினை பிறிதொரு அதிகாரியினால் பின் விசாரிப்பு மேற்கொள்ளப்படுவதற்கான சான்றுகள் இருக்கவில்லை. | 2021 | பொலிஸ் நிலையங்கள், தடுத்து வைத்தல் நிலையங்கள், மற்றும் சிறைச்சாலைகள் அவதானிக்கப்பட்டு விசாரணை அதிகாரியினால் தயாரிக்கப்படும் அறிக்கையில் அந்த நிலையங்களின் அவதானிப்பின் போது வெளியான விடயங்கள் அது தொடர்பாக தமது முடிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை யாவை என்பன உட்படுத்தப்பட வேண்டும். | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரை அமுல்படுத்தாமை தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்வதற்காக ஆணைக்குழுவினால் அதற்கான பரிசோதனைகள் மற்றும் விசாரணைப் பிரிவினால் தனியான பிரிவு ஒன்று ஸ்தாபித்து அமுல்படுத்தாமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரிந்துரையின் பிரகாரம் பொலிஸ் நிலையங்களில் நிறுத்தி வைத்தல், சிறைச்சாலைகளில் அவதானிக்கப்பட்ட புலனாய்வு உத்தியோகத்தர்களால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் என்ன என்பவைகளை உள்ளடக்கி மேற்கொள்ள வேண்டியிருந்ததாக மாத்தறை அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றது. |
| 3 | ஆணைக்குழுவினால் 2004 சனவரி 01 ஆந் திகதிக்குப் பிறகு கையேற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் நிதியல்லா | 2021 2022 | சபைக்குரிய சகல சொத்துக்களும் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட | மதிப்பீட்டு சபை ஒன்றை நியமித்து சகல பொருட்களையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை | 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சொத்துக்களுக்கான கூற்றில் உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்த சொத்துக்கள் உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு முடிவடைந்த பின்னர் மெய்மையாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| 4 | ஆணைக்குழுவினால் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 2019 முதல் 2023 வரையான காலத்தின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளில் அமுல்படுத்தப்பட்ட பரிந்துரைகளின் வீதம் முறையே 25, 18, 25, 30 மற்றும் 18 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | 2023 | ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைகள் உரிய நிறுவனங்களினால் அமுல்படுத்துதல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை. | ஆணைக்குழுவின் பிரிந்துரையைப் பெற்ற பின்னர் அது தொடர்பாக அமுல்படுத்துதல் உரிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருந்ததுடன் அது அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 17.∴2005 இன் மூலமும் தொழிற்படுத்தப்பட்டுள்ளது. அதனை அமுல்படுத்துவதில் நடைமுறை ரீதியில் பிரச்சனைகள் காணப்படுமாயின் அது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறிவித்து கலந்துரையாடுதல் அந்த நிறுவனத்திற்குரிய பொறுப்பாகும். அவ்வாறே முறைப்பாட்டாளருக்கு பரிந்துரை விநியோகிக்கும் போது அது அமுல்படுத்துவதற்கு குறித்துரைத்த இறுதித் திகதியில் இருந்து 07 நாட்களுக்குள் அறிவிக்குமாறும் | 2019 முதல் 2022 வரை வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு இடையே அமுல்படுத்தப்படாத பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக முறைப்பாட்டளர்கள் மற்றும் உரிய நிறுவனங்களை வரவழைத்து பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மேலும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் முறைப்பாட்டளர்களுக்கு அது தொடர்பாக தொடர்ந்தும் முன்வராமை மற்றும் நீதிமன்றத்திற்கு இடையே வழக்கு விசாரணைகள் காணப்படுகின்ற முறைப்பாடுகளை பின்தொடர் நடவடிக்கை பிரிவில் இருந்து அகற்றி ஆவண கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இல்லையாயின் அது தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்காதிருந்தமை குறித்துரைத்த ரீதியில் உரிய பரிந்துரையில் குறிப்பிட்டு அனுப்பப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆணைக்குழு சட்டத்தை திருத்துதல் தொடர்பாக சிவில் சமூக அங்கத்தவர்கள் மற்றும் உரிய ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி கருத்துரைகளை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேற்கொள்வதற்கு ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. |
| 5 | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 11(ஊ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு மனித உரிமைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் அந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை பகிரங்கப்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் மனித உரிமைகள் தொடர்பான 02 செயற்பாடுகளின் தலையீடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | 2023 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 11(ஊ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வைப் பிரிவில் காணப்பட்ட வரையறுத்த மனித வளங்கள் மற்றும் நிதி வசதிகளின் வரையறையாக இருந்த போதிலும் மனித வளங்கள் தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொள்ளல் மற்றும் அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட அறிவினை பகிரங்கப்படுத்துதல் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை ரீதியான 02 பங்கு பற்றல்கள் அதாவது ஏற்றுமதி உற்பத்தி | உரிய மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தெரிவு செய்யப்பட்ட 02 துறைகளில் ஆய்வு அறிக்கை 2024 ஆம் ஆண்டின் இறுதி அளவில் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வலயங்களில் தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை பெற்று நிறுவனங்களின் ஊழியர்களின் உரித்து தொடர்பாக உரிய பங்கு பற்றல் மற்றும் 2023 மாத்தறை நில்வள கங்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வெள்ள நீர் வடித்தல் தொடர்பான பங்குபற்றல் 2023 ஆம் ஆண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| 6 | பிரதான அலுவலகம் மற்றும் 10 பிரதேச அலுவலகங்களுக்கு நாளொன்றுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை சராசரியாக முறையே 30 மற்றும் 56 அளவாக இருந்ததது. அவ்வாறே தற்போது பிரதான அலுவலகத்திடம் காணப்பட்ட தரவு முறைமையில் 28 கணனிகள் மற்றும் பிரதேச அலுவலகத்திற்குரிய தரவுகளை உள்ளடக்கக் கூடிய 26 கணனிகள் காணப்படும் போது கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தரவு | 2023 | தரவு முறைமையை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக கையளித்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளல் மற்றும் செயலாற்றல் தொடர்பாக மேற்பார்வையை வலுப்படுத்துதல் வேண்டும். | தற்போது காணப்படுகின்ற கணனியினைப் பயன்படுத்தி மற்றும் ஸ்கான் இயந்திரத்தை பயன்படுத்தி தரவுகள் உள்ளடக்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் கணனி இயந்திரம் மற்றும் ஸ்கான் இயந்திரம் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையினால் எதிர்காலத்தில் நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | தரவு முறைமையை நாளது வரையாக்கப்படுகின்றது. தரவு முறைமையில் மேற்கொள்ள வேண்டிய சிற்சில மாற்றங்கள், வலயமைப்பு மற்றும் உரிய நிறுவனத்தின் பங்குபற்றலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு தரவு முறைமையினை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற தொழில்நுட்ப வழுக்களைச் சரி செய்தல் மற்றும் தொடர்ந்தும் நாளது வரையாக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறைமையினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 7 | 2024 பெப்ரவரி 09 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஹியூரின் தரவு முறைமை மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 வருட காலப்பகுதியின் போது பிரதான அலுவலகத்திலும், பிரதேச அலுவலகங்களிலும் 57 உத்தியோகத்தர்களுக்கிடையே 9728 முறைப்பாடுகள் விசாரணை செய்வதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியின் போது அதில் 1654 முறைப்பாடுகள் முடிவடைந்திருந்ததுடன் மேலும் 8074 முறைப்பாடுகள் விசாரணை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருநதமையும் உரிய காலப்பகுதியில் 29 உத்தியோகத்தர்கள் எந்தவொரு முறைப்பாட்டையும் விசாரணை செய்யாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. உத்தியோகதத்தர்களுக்கு முறைப்பாடுகளை | 2023 | தரவு முறைமையை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2020.01.01 ஆந் திகதி முதல் 2023.12.31 ஆந் திகதி வரை ஹியூரின் முறைமையில் முறைப்பாடுகள் 9728 தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த தகவல்களின் பிரகாரம் 57 உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அந்த கோவைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதன் போது அந்தக் கோவைகள் சட்ட உத்தியோகத்தர் மற்றும் மனித உரிமைகள் உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பெயரில் உள்ளடக்கப்பட்டுள்ளது. உரிய பிரகாரம் ஹியூரின் முறைமை நாளது வரையாக்குதல் தொடரபாக 2024.03.18 ஆந் திகதி உரிய உத்தியோகத்தர்களை வரவழைத்து கலந்துரையாடப்பட்டதுடன் அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | முறைப்பாடுகள் விசாரணை செய்தல் முறையான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த முறைப்பாடுகளை விசாரணை செய்தலை மேற்பார்வை செய்தலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அமுல்படுத்துவதற்கும், முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கையளித்தல் தொடர்பாகவும் எந்தவொரு திட்டமுறைமையும் காணப்படாதிருந்ததுடன் தரவு முறைமையின் பிரகாரம் 04 வருடங்களுக்கும் 50 முறைப்பாடுகளை விட குறைவாக விசாரணை செய்து பரிந்துரை வழங்கிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 24 பேர் ஆகும். | | | | |
| 8 | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 9(3) பிரிவின் பிரகாரம் ஏனைய ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவினால் அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அந்த கூட்டங்களின் போது நடவடிக்கை எடுத்தல் தொடர்பான பணி நடைமுறை ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 27 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அவ்வாறான பணி நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 9(3) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு கூட்டத்தை நடாத்துதல் மற்றும் அந்த கூட்டங்களின் போது நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பான பணி நடைமுறை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். | இதற்காக ஆணைக்குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயலாளரால் உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 1996 இன் 21 ஆம் இலக்க சட்டம் தற்போது ஈடுகொடுக்கும் வகையில் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கு இணையாக நடைமுறைகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளுக்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 9 | ஆணைக்குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்காக ஆணைக்குழு அங்கத்தவரின் | 2023 | 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | இதற்காக ஆணைக்குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி செயலாளரால் | பதவி நிலை கூட்டங்களில் செயல் நடைமுறைகளில் அவ்வப்போது நியமிக்கப்படுகின்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணக்கப்பாடு அல்லது இணக்கமின்மை எழுத்து மூலம் பெறப்படாமையினால் 2023 பெப்ரவரி 15 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட ஆணைக்குழு பத்திரங்களுக்கு புறம்பாக ஒரு விடயத்தை உள்ளடக்கி அது 2023 மார்ச் 29 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்து செயலாளரால் உரிய தீர்மானம் ஒவ்வொரு பிரிவிற்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானத்திற்காக ஆணைக்குழு அங்கத்தவர்களின் இணக்கப்பாடு பெறப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | சட்டத்தின் 9(3) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு கூட்டத்தை நடாத்துதல் மற்றும் அந்த கூட்டங்களின் போது நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக பணி நடைமுறை ஒன்று தயாரித்தல் வேண்டும். | உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவினால் கலந்துரையாடப்பட்டு அங்கீகரித்த திட்டத்தின் பிரகாரம் இதுவரை அமுல்படுத்தப்படுகின்றது. |
| 10 | யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்தில் முறைபாட்டுக் கோவையினை தெரிவுப் பரிசோதனை செய்த போது பிரதேச இணைப்பு உத்தியோகத்தரால் 05 முறைப்பாடுகளின் தொடர்பு இலக்கத்திற்காக வேறு முறைப்பாடுகள் உள்ளடக்கி மாற்றப்பட்டிருந்தது. | 2023 | பிரதேச அலுவலகங்களின் பணிகளை உரியவாறு மேற்பார்வை செய்தல் வேண்டும். | யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்லும் போது அதில் காணப்பட்ட ஊழியர் பற்றாக்குறையின் அடிப்படையில் பயிற்சி மாணவர்களின் உதவியுடன் அலுவலக நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்டதுடன் அவர்களினால் ஆவணங்களில் தரவுகளை | பிரதேச அலுவலகங்களின் பணிகள் உரியவாறு மேற்பார்வை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேற்குறிப்பிட்ட தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளடக்கும் போது தாமத வழுக்களினால் ஒரே முறைப்பாடு இருதடவை ஆவணங்களுக்கு கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 11 | யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்தில் முறைப்பாடுகளை பதியும் பதிவேட்டில் 35 முறைப்பாடுகளில் முறைப்பாட்டாளர்களின் பெயர், முகவரி, முறைப்பாடு தொடர்பான விபரங்கள் மற்றும் முறைப்பாடுகளுக்கு பதில் வழங்க வேண்டிய தரப்பினர் போன்ற தகவல்கள் டிபெக்ஸ் பயன்படுத்தி மாற்றப்பட்டிருந்ததுடன் தொடர்பு இலக்கம் 23 இன் தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | 2023 | பிரதேச அலுவலகங்களின் பணிகளை உரியவாறு மேற்பார்வை செய்தல் வேண்டும். | தகவல் பதிவேட்டில் உள்ளடக்கும் போது ஏற்பட்ட தாமத வழுக்களை சரி செய்வதற்கு திபெக்ஸ் பயன்படுத்தப்பட்டதுடன் எந்த ஒரு கோவையும் அகற்றப்படவில்லை. | பிரதேச அலுவலகங்களின் பணிகளை உரியவாறு மேற்பார்வை செய்வதற்கு தேவயைான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த தாமத வழுக்களைத் தவிர்ப்பதற்கு திபெக்ஸ் இடப்பட்டதுடன் எந்த ஒரு கோவையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3.6 இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு

| | மொத்த சொத்துக்கள் (ரூபா) | மொத்த பொறுப்புக்கள் (ரூபா) | உரிமை மூலதனம் (ரூபா) | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,632,794,669 | 1,632,794,669 | 1,632,773,633 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,633,227,345 | 1,633,227,345 | 1,633,195,784 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,241,644,739 | 2,241,644,739 | 2,241,538,353 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணைக்குழுவினால் தொடரப்பட்ட வழக்குகளில் 2019 மற்றும் 2020 வருடங்களில் 10 வழக்குகள் பற்பல காரணங்களினால் வாபஸ் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 39 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருந்தன. அவ் வழக்குகள் 39 இல், 2015 வருடத்திற்கு முன்னர் தொடரப்பட்ட 5 வழக்குகள் இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது தொடரப்பட்ட 02 வழக்குகள் இருந்தன. மீதி 32 வழக்குகள், 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் தொடரப்பட்ட வழக்குகள் ஆகும். | 2021 | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகளில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் நீக்கப்பட்டு மீண்டும் வழக்குகள் தொடரப்பட வேண்டும். | தொழில்நுட்ப வழுக்களை சரி செய்து மீண்டும் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகளை மீண்டும் வழக்கு தொடர்வதற்கான இயலுமை உள்ள மற்றும் ஆணைக்குழு கருதுகின்ற வழக்குகள் மாத்திரம் தொடரப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 1954 இன் 11 ஆம் இலக்க இலஞ்சம் சட்டத்தின் பிரிவு 30(அ)(3) பிரிவின்படி, சுற்றிவளைப்புக்களில் பயன்படுத்தப்பட்ட பண நோட்டுகளுக்கு நீதவான் நீதிமன்றத்தில் பணச் சான்றிதழொன்று வழங்கப்படுகின்றமையால் முடிந்தளவு அனைத்திற்கும் பணச் சான்றிதழொன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முடியுமாக இருந்தபோதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததால், 2022 திசெம்பர் 31 இல் ரூபா 39,716,535 ஆன அரசின் பணம் வழக்குப் பொருள் உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டது. | 2022 | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத்திற்கு கோரிக்கை சமர்ப்பிப்பதற்கு சட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023.06.22 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின் போது நீதிமன்றத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இயலுமான வரை நிதியினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிதியினை விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| 3 | ஆணைக்குழுவினால் 2021 ஆம் வருடத்தில் 69 வழக்குகள் முடிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 40 வழக்குகள் அதாவது 58 சதவீதம் வாபஸ் பெறப்பட்டிருந்தன. 18 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 11 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மட்டுமே தண்டனை பெற்றனர். 2022 ஆம் ஆண்டில், 89 | 2022 | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக விரைவில் மீண்டும் வழக்குகள தொடரப்பட வேண்டியமை அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்கப்பட வேண்டியமை | தொழில்நுட்ப வழுக்களை சரி செய்து மீண்டும் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | வாபஸ் பெறப்பட்டுள்ள வழக்குகளை மீண்டும் வழக்கு தொடர்வதற்கான இயலுமை உள்ள மற்றும் ஆணைக்குழு கருதுகின்ற வழக்குகள் மாத்திரம் தொடரப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழக்குகள் ஒதுக்கப்பட்டு அவற்றில் 45 வழக்குகள் பல்வேறு காரணங்களால் வாபஸ் பெறப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 19 வரை அவற்றில் 20 வழக்குகள் மட்டுமே மீண்டும் ஒதுக்கப்பட்டிருந்தன. | | | | |
